நீலகிரி மாவட்டத்தின் 200–வது ஆண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில்

பழங்குடியின மக்களின் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வகையில் அருங்காட்சியகம் அமைக்கப்படும்!

சட்டப்பேரவையில் “திட்டம் வளர்ச்சி - சிறப்பு முயற்சிகள் துறை கோரிக்கை மீது அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் பதிலுரை!

சென்னை, ஏப். 22 -

சட்டப்பேரவையில் நேற்று திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மீதான கோரிக்கைக்கு பதிலுரை வழங்கிய அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியின மக்களின் வளமான இயற்கை மற்றும் கலாச்சார வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் அனுபவ மையம் அமைக்கப்படும் என அறிவித்தார்.

திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை - நிதித் துறை - மனிதவள மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்களின் பதிலுரை வருமாறு:-

உறுப்பினர் செந்தில் குமார் அவர்கள் சொன்ன பல நல்ல கருத்துகளில் இரண்டு மிகவும் தவறான புள்ளிவிவரங்களை இங்கே கூறியிருக்கிறார். அதை ஓரளவிற்கு திருத்தினேன். இன்னும் கூடுதல் தகவல் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் நாங்கள் 3,85,000 கோடி ரூபாய் கடன் எடுத்தோம் என்று சொன்னார். வெள்ளை அறிக்கையில் நான் அன்றைக்கே காண்பித்தேன். கடைசி 5 வருடத்தில் 39,000 கோடி ரூபாய்க்கு மேல் மறைமுகமான கடன் எடுக்கப்பட்டது. அதனால் அவர்கள் 10 ஆண்டுக் காலத்தில் எடுத்த கடன் 4 இலட்சத்து 22 ஆயிரம் கோடி ரூபாய், 3,85,000 கோடி ரூபாய் கிடையாது.

அதில்லாமல் 80 சதவிகிதம் முதலீட்டிற்கு செலவு செய்தோம் என்று சொன்னார். மொத்தமாக அவர்கள் முதலீட்டிற்கு செலவு செய்தது வெறும் 2 இலட்சம் கோடி ரூபாய்தான். அதனால் 50 சதவிகிதம்கூட அவர்கள் செயல்படுத்தவில்லை. அறிவிப்புக்கு முன் ஒரே ஒரு கருத்தைக் கூறுகிறேன். இசேவை மையம் என்பது அன்றைக்கு உங்களுடைய ஒப்புதலுடன் அன்றைக்கு கலைவாணர் அரங்கத்தில் வாங்கிய desktop computers வைத்து செயல்படுத்துவதற்கு திட்டம் போட்டோம். அது எவ்வளவு சிறப்பாக நடைபெறுகிறது என்றால், ஏற்கெனவே என் அலுவலகத்தில் என் computer ஒன்று வைத்து, அதிகாரமில்லாத ஒரு மையத்தை நடத்திக்கொண்டிருந்தேன். இப்போது மார்ச் மாதம் அதிகாரம் பெற்ற மையத்தை உருவாக்கிய பிறகு கிட்டத்தட்ட 108 நபர்களுக்கு வெவ்வேறு சான்றிதழ்கள் மற்றும் அரசு official documents வழங்கப்பட்டு, மொத்த செலவு அதற்கு வெறும் 4,850 ரூபாய்தான். Of course அதை நாங்களே கொடுத்துவிடுகிறோம். ஏனென்றால், 50 ரூபாய், 50 ரூபாய் எல்லாம் வாக்காளர் அட்டைக்கு வாங்குவது தவறு. எந்த எம்.எல்.ஏவும் அந்த அளவிற்கு செலவு செய்ய முடியாத சூழ்நிலையில் இல்லையென்று கருதுகிறேன். உதாரணத்திற்கு பெரிய விவசாயி இங்கே இருக்கிறார், வேங்கையின் மைந்தன். அதனால் இந்த

இசேவை மையத்தை எந்த அளவிற்கு செயல்படுத்துகிறோமோ அது மக்களுக்கு மிகவும் பயனாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். நான்கு துறைகளிலும் வந்த வெட்டுத் தீர்மானங்களை நான் படித்து, ஓரளவிற்கு ஏற்கெனவே, கொள்கை விளக்கத்தில் அதற்கு பதிலளித்திருக்கிறேன். கூடுதலாக, சில அறிவிப்புகளில் தெளிவு வரும் என்று கருதுகிறேன்.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அறிவிப்புகள்!

1. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின்கீழ் புதுமைகளை புகுத்துவதற்காகவும், காலநிலை பாதிப்பற்ற மற்றும் வளம் குன்றா எதிர்கால வளர்ச்சிக்காகவும், அதிநவீன தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும் வகையில் ஆளுகைக்கான புத்தாக்க மையம், மாநிலத் திட்டக் குழுவில் அமைத்தல்

அரசுத் துறைகள், மாவட்ட நிர்வாகம் அதிநவீன தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து புதுமைகளை செயல்படுத்தவும், மக்களுக்குப் பொதுச் சேவைகள் அளிக்க தடையாக உள்ள சிக்கல்களை மற்றும் சவால்களை கண்டறிந்து அவற்றை புதுமையான முயற்சிகள்மூலம் தீர்வு காணும் திட்டங்களை கண்டறிந்து நல் ஆளுமையில் புதுமைகளை புதுத்துவதற்கு ஏதுவாக ஆளுகைக்கான புத்தாக்க மையம் உருவாக்கப்படும்.

Centre for innovation in governance State Planning Commission அடிப்படையில் அமைக்கப்படும்.

2. கூடுதல் தகவல் தொழில்நுட்ப வசதியை வழங்குவதன்மூலம் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் செயலாற்றல் திறனை மேம்படுத்துவதற்காக நவீனமயமாக்கல்

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் செயலாற்றல் திறனை மேம்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப உதவியுடன் புள்ளிவிவரங்களை சேகரித்தல், தொகுத்தல், அட்டவணைப்படுத்துதல் மற்றும் அறிக்கைகளை உரிய நேரத்தில் வெளியிட்டு, அரசின் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்த பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் மாநிலத் துறைத் தலைமையிடம், 6 மண்டல அலுவலகங்கள், 32 மாவட்ட துணை இயக்குநர் அலுவலகங்கள், 75 கோட்ட புள்ளிஇயல் உதவி இயக்குநர் அலுவலகங்கள், 385 வட்டார புள்ளிஇயல் அலுவலகங்களை வலுப்படுத்தும் பொருட்டு, கணினிகள், தொழில்நுட்ப வசதிகள், மென்பொருள் மேம்படுத்துதல், இணையதள மற்றும் வலைதள வசதிகளும் செயல்படுத்தப்பட்டு நவீனமயமாக்கப்படும்.

பல இடங்களில் கூறியிருக்கிறேன். Department of Economics and Statisticsன் விதிமுறை is not modern enough.

3. ரூ.150 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து மாநில அரசு நிதியுதவி திட்டங்களில் அதிக பொதுச் செலவினங்களின் செலவுத் திறன் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை மற்றும் இதர ஆதாரங்களை வழங்குவதற்கு அறிக்கைகளை தயாரித்தல்.

முதலமைச்சரின் ஆய்வுக் கூட்டத்தில் ரூ. 150 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு பெற்றுள்ள அனைத்துத் திட்டங்களையும், அதிக பொதுச் செலவுத்திறன் குறித்த மதிப்புமிக்க ஆதாரங்களை வழங்கும் பொருட்டு, மதிப்பீடு செய்ய முடிவெடுக்கப்பட்டது. இத்திட்டங்களை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலமாகவும் (DEAR), வெளிநிறுவனங்கள் மூலமாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளலாம். 150 கோடிக்கு Planning Commission. உறுப்பினர் வரும் மாவட்டத்திலிருந்து, அவர் அங்கே இல்லை.

4. நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் உள்ள தொன்மை வாய்ந்த உதகை ஏரியை பாதுகாக்கும் வகையில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில், இணைப்பு கால்வாய் மற்றும் ஏரியையும் தூர்வாரி, குப்பைகளை அகற்றும் பொருட்டு ஏரியின் நுழைவு வாயிலில் சிறப்பு தானியங்கி இயந்திர அமைப்பை சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நிறுவுதல்.

உதகை ஏரியை தூர்வாரவும், குப்பை, பிளாஸ்டிக், வண்டல் மண் போன்றவற்றை நீக்கி மீண்டும் மாசு ஏற்படாமல் தடுக்க, தொழில்நுட்ப தடுப்பு முறைகளை பயன்படுத்தி, சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார அமைப்பின் மூலம் ரூ.10.00 கோடி செலவில், கோடப்பமந்து முதல் ஏரி வரை தூர்வாரும் திட்டத்தை செயல்படுத்த, ஏரியின் நுழைவு வாயிலில் தானியங்கி சுத்தப்படுத்தும் அமைப்பு ஏற்படுத்தப்படும்.

5. நீலகிரி மாவட்டத்தின் 200வது ஆண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியின மக்களின் வளமான இயற்கை மற்றும் கலாச்சார வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் அனுபவ மையம் அமைத்தல்.

நீலகிரி மாவட்டத்தின் வளமான மானுடவியல், பழங்குடியின மக்களின், இயற்கை மற்றும் கலாச்சார வரலாற்றை வெளிப்படுத்தும் நோக்கத்துடன், மாவட்டத்தின் தனித்துவமான வரலாறு மற்றும் கலாச்சாரத்தின் ஆழமான மற்றும் உள்ளார்ந்த அனுபவத்தை வழங்க அதிநவீன தொழில்நுட்பத்துடன் பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் அனுபவ மையம் ஏற்படுத்தப்படும். நீலகிரி பாரம்பரிய அருங்காட்சியகம் மற்றும் அனுபவ மையம், நீலகிரி மாவட்டத்திற்கு கூடுதல் மதிப்பு ஏற்படுத்தக்கூடியதாகவும், உலகம் முழுவதிலுமிருந்தும் பார்வையாளர்களை ஈர்த்து உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்த ஏதுவாக இருக்கும்.

கீழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளை சேர்த்தல்.

கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள ஜவ்வாது மலை (வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம்), சேர்வராயன் மலை (சேலம் மாவட்டங்கள்), கல்வராயன் மலை (கள்ளக்குறிச்சி மாவட்டம்), கொல்லிமலை (நாமக்கல் மாவட்டம்), பச்சைமலை (பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாவட்டங்கள்) ஆகிய மலைப்பகுதிகளில், இப்பகுதிகளின் பல்லுயிர் பாதுகாப்பின் மூலம் முழுமையான வளர்ச்சியை உறுதிசெய்ய, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திட்டம் செயல்படுத்தப்படும்.

அதாவது, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், சேலம் மாவட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம், நாமக்கல் மாவட்டம், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள பச்சைமலை ஆகிய பகுதிகளை சேர்த்தல்.

8. மதுரையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்ட மண்டல அலுவலகம் அமைத்தல்.

தெற்கு மாவட்டங்களில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்துவதை கண்காணிக்க மற்றும் மேற்பார்வையிடும் பொருட்டு, மதுரையில் ஒரு மண்டல அலுவலகம் அமைக்கப்படும்.

இறுதியாக, மதுரையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்ட மண்டல அலுவலகம் ஒன்று புதியதாக அமைத்தல். இது இந்த துறை. அடுத்து, மனிதவள மேலாண்மைத் துறை. 5 அறிவிப்புகள் மட்டுமே உள்ளது.

மனித வள மேலாண்மைத் துறை அறிவிப்புகள்!

1. ஒருங்கிணைந்த மனித வள மேலாண்மை குறித்த நிலைப்பாட்டு அறிக்கை.

தெரிவுகள் மூலம் தகுதிவாய்ந்த நபர்களை அரசுப் பணிகளில் வெளிப்படைத் தன்மையுடன் துரிதமாக பணியமர்த்துதல் அரசின் தலையாய கடமையாகும். அத்தெரிவு முறைகளில் தகுந்த புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி வழிமுறைகளை வகுத்தலும் இன்றியமையாதவை ஆகும்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களின் திறமையை, பணியில் சிறக்கும் வண்ணம் மேம்படுத்துதலும், உயர்பதவிகளுக்கு ஏற்றவாறு பயிற்சிகள் அளித்தலும், அவர்களை அங்கீகரித்து ஊக்கப்படுத்துதலும், மக்கள் சேவையில் அவர்களது பணி சிறக்கவும், பங்களிப்பின் தரம் உயரவும் வழிவகை செய்யும். பணியில் ஒழுக்கம், ஊக்கம், அங்கீகாரம் போன்றவையும் மனித வளத்தை மேருகேற்றும் உத்திகள் ஆகும். மேற்படி இலக்கினை நோக்கி, ஒருங்கிணைந்த முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் துறையை தன்னிறைவு அடையச் செய்வதற்கான சிறப்பு மற்றும் விரிவான தொகுப்பு ரூ.2.50 கோடி செலவில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்தல்.

நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் துறையை தன்னிறைவு அடையச் செய்ய, “சிறப்பு மற்றும் விரிவான தொகுப்பு” என்ற சிறப்புத் திட்டத்தை சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

7. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இக்கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கிய, பணியாளர் தெரிவு, பணித்திறன் மேம்பாடு மற்றும் பணியாளர் மேலாண்மை குறித்த நிலைப்பாட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்படும்.

முதலில், ஒருங்கிணைந்த மனித வள மேலாண்மை குறித்த நிலைப்பாட்டு அறிக்கை. பல இடங்களில் நாங்கள் என்ன செய்தோம், நீங்கள் என்ன செய்தீர்கள், யார் outsourcing கொண்டு வந்தார்கள். எத்தனை காலி இடங்கள் இருக்கின்றன. எல்லாம் வதந்தியாக வருகிறது. அதிகாரப் பூர்வ ஒரு நிலைப்பாட்டு அறிக்கை வெளியிடப்படும்.

2. தேர்வாணையத்தில் விடைத்தாட்களை மதிப்பீடு செய்வதற்கு புதிய உயர் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் ஆண்டொன்றிற்கு 40 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வெவ்வேறு அரசுப் பணிகளுக்கான தேர்வுகளை எழுதி வருகின்றனர். இத்தேர்வுகள் பல்வேறு தரத்திலான பணி நிலைகளுக்கேற்ப நடத்தப்படுகின்றன. எனவே, இவற்றை கையாளும் முறைகளும் செயல் திட்டங்களும் வேறுபடுகின்றன. ஒவ்வொரு தேர்வுக்கான பணியிலும், அதன்பின் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள், தெரிவுகள் போன்ற நடவடிக்கைகளிலும் பெரிய அளவிலான கட்டமைப்புகளையும் பணியாளர்களையும் ஈடுபடுத்த வேண்டியுள்ளது.

தற்போதுள்ள நடைமுறைகளில், கால தாமதம் மற்றும் பெரும் கட்டமைப்புகளையும் சார்ந்துள்ள நிலையைத் தவிர்த்து, தெரிவுப் பணிகளை தெளிவாகவும் முறையாகவும் மேற்கொள்ளவும், தேர்வுகளுக்குப் பிந்தைய நடவடிக்கைகளை துரிதமாகவும் வெளிப்படையாகவும் கையாள்வதற்கும், புதிய உயர் தொழில்நுட்பம் தேர்வாணையத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

இரண்டாவது, தேர்வாணையத்தில் விடைத்தாட்களை மதிப்பீடு செய்வதற்கு புதிய உயர் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல். இப்போதைக்கு paperல் வாங்கிட்டு, அது மிகவும் பழைய softwareஐ வைத்து அது அதிக நாட்கள் எடுக்கிறது. Group IV exam காலதாமதமாகியது. இதை Artificial Intelligence, Automation வைத்து இதைத் திருத்துவதற்கு தொழில்நுட்பத்தை வழங்குவதற்கு நிதியுதவி.

3. தேர்வாணையத்தில் கணினிவழி தேர்வு நடைமுறையை அறிமுகப்படுத்த சாத்தியக்கூறுகளை ஆராய்தல்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில், ஒரே தேர்விற்கு 25,000 முதல் 25 லட்சம் வரையிலான எண்ணிக்கையில் பணி நாடுநர்கள் தேர்வுகளை எழுதி வருகின்றனர். இவ்வாறு எழுதப்படும் தேர்வுகளில் திருத்தப்படும் பாடவாரியான விடைத்தாள்களின் எண்ணிக்கைகளும் பல மடங்காகும். இது பெருமளவு பணியாளர்கள் மற்றும் கால நேரம் தேவைப்படும் நடவடிக்கையாகும்.

அகில இந்திய அளவில் நடத்தப்படுகின்ற பல்வேறு போட்டித் தேர்வுகளில் பின்பற்றப்படும் கொள்குறி வகை (Objective Type - Multiple Choice Questions) தேர்வுகள் பற்றிய வழிமுறைகளை ஆராய்ந்து, அனுபவங்களின் அடிப்படையில், கால தாமதத்தை தவிர்த்து, வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யும் வகையில், தேர்வாணையத்தால் கணினிவழி தேர்வு (Computer Based Tests) முறையினை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் (Feasibility Study) ஆராயப்படும்.

மூன்றாவது, தேர்வாணையத்தில் கணினி வழி தேர்வு நடைமுறையை அறிமுகப்படுத்த சாத்தியக்கூறுகளை ஆராய்தல். அதாவது, இப்போதைக்கு, paper based test ஆக இருப்பதை, computer based test ஆக உருவாக்குவது, குறிப்பாக, 20 இலட்சம், 30 இலட்சம் பேர் ஒரே நேரத்தில் எழுதக்கூடிய தேர்வுகளையெல்லாம் computer based test ஆக்குவதற்கு ஒரு சாத்தியக் கூறு அறிக்கை.

4. ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டத்தை உருவாக்கிட ஆய்வு மேற்கொள்ளுதல்.

மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துதல், பொதுப் பயன்பாட்டிற்கான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், இயற்கை வளங்களை பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு விதமான பணிகள், தொடர்புடைய அரசுத் துறை பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒவ்வொரு துறையிலும், அத்துறையின் தன்மை மற்றும் பணிகள் தொடர்பாக வெவ்வேறு விதமான பயிற்சிகள் பணியாளர்களுக்குத் தேவைப்படுகின்றது. அதற்கேற்ப துறைகள் யாவும் தத்தமது பணியாளர்களுக்கு, உரிய பயிற்சித் திட்டங்களை வகுத்த வண்ணம் உள்ளன. பல்வேறு பயிற்சி கட்டமைப்புகளும் துறைகளினால் தனித்தனியே உருவாக்கப்பட்டுள்ளன.

வெவ்வேறு துறைகளின் பயிற்சி மையங்களின் ஆற்றல் மற்றும் பங்களிப்பினை அதிகரித்திட, இம்மையங்கள் பொது நோக்கத்துடன் விரிவாக செயல்பட, ஒரே வகையான துறைகள் மற்றும் பணியாளர்களுக்கு ஒருங்கிணைந்த பயிற்சி உள்ளிட்ட சாத்தியக்கூறுகளை கூர்ந்து ஆய்ந்திட தக்க செயல்திட்டத்தினை வகுத்து, பணியாளர்களின் திறனை மேம்படுத்திட ஓர் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

இப்போதைக்கு பவானிசாகர் ஒரு training. துறைரீதியாக வேறு ஒரு training. எந்த காலத்தில் செய்தால் probation முடியும்? எதை Anna Administrative Staff Collegeல் மேற்கொள்ள வேண்டும் என்பது போன்ற தனித்தனி விதிமுறையுள்ளதை ஒருங்கிணைந்த full career training programme என்பதுபோல் உருவாக்குதல்.

5. நலத்திட்ட விவரங்கள் அறிந்துகொள்ள ஒருங்கிணைந்த தரவு தளம்.

வெவ்வேறு துறைகளால் வழங்கப்படுகின்ற மக்கள் நலத் திட்டங்களின் பயனர்கள் குறித்த விவரங்கள் யாவும் பொது மக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம், தரவு தளம் ஒன்று படிப்படியாக தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் உதவியுடன் உருவாக்கப்பட்டு, அத்துறையால் நிர்வகிக்கப்படும்.

நலத் திட்டங்களின் பயனாளிகள் குறித்த தகவல்களை பகிரும் இந்த முயற்சி, பொது ஊழியர்களின் பொறுப்புணர்வை மேம்படுத்துவதுடன் வெளிப்படைத்தன்மை மற்றும் சமூக கண்காணிப்புக்கும் வழிவகை செய்யும்.

நலத்திட்ட விவரங்கள் அறிந்து கொள்ள ஒருங்கிணைந்த தரவு தளம். integrated website to view beneficiaries of all welfare schemes.

நீதி மற்றும் ஓய்வூதியத் துறை அறிவிப்புகள்!

1. இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்.

இத்திட்டத்தை பயனாளிகள் எளிதாக அணுகும் வகையில் பணியாளர்கள், ஓய்வூதியதாரர்கள் உள்ளிட்ட அனைவரின் பயன்பாட்டிற்காக திட்டத்தைப் பற்றிய முழுமையான தகவல்கள், நிலுவையிலுள்ள மருத்துவ சிகிச்சைக்கான கட்டண விவரங்களின் நிலை, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் பட்டியல்கள், தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் மற்றும் குறைகளை முறையிடுவதற்கான அலுவலர்கள் தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கான இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி துவக்கப்பட உள்ளது.

இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம். Employees Health Insuranceக்கு mobile appலும் handheld phoneலும், அதாவது tablet, websiteலும் உருவாக்குதல்.

2. பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான கைப்பேசி செயலி.

பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு எளிதில் சேவைகளை வழங்குவதற்காக அனைத்து பணி விவரங்களை உள்ளடக்கிய கைப்பேசி செயலியினை அரசு உருவாக்கும். இந்த செயலி மூலம், பணியாளர்கள் அனைத்து வகையான விடுப்புகள், கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் ஊதியச்சீட்டு, வருமானவரி பிடித்தம் செய்யப்பட்டதற்கான படிவம் 16 ஆகியவற்றையும் பதிவிறக்கம் செய்யலாம். விடுப்புக்கால பயணச் சலுகை, பயணப்படி, மாறுதல் பயணப்படி போன்ற தனிப்பட்ட கோரிக்கைகளின் நிலையை கண்டறியலாம். இந்த செயலியில் மின் பணிப்பதிவேட்டினை பார்க்கவும், திருத்தங்கள் மேற்கொள்ளவும் இயலும். ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியச் சீட்டு, ஓய்வூதியம் பெறப்பட்ட விவரங்கள், படிவம் 16 ஆகியவற்றைப் பதிவிறக்கம் செய்யலாம். மேலும், வாரிசுதாரர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்யவும் இந்தச் செயலியைப் பயன்படுத்தலாம்.

இரண்டாவது, பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான கைப்பேசி செயலி. அவர்களுடைய IFHRMS தகவல்களைப் பெற்று, அவர்கள் application போடுவதற்கு leave, payslip, form 16, LTC, TA, TTA இதையெல்லாம் onlineலேயே செயல்படுத்தப்படுதற்கான செயலி.

3. பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் உள்ள பணியாளர்களுக்கு இணைய வழியில் இறுதி ஒப்பளிப்பு ஆணை வழங்கல்:

பங்களிப்பு ஓய்வூதிய திட்டம், சத்துணவு மற்றும் அங்கன்வாடி திட்டங்களின்கீழ் பணிபுரிந்து ஓய்வு பெற்ற/இறந்த பணியாளர்களுக்கு இறுதித் தொகை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு இறுதித்தொகை வழங்கும் பணிகளை இணையவழி (Online) வாயிலாக மேற்கொள்ள அரசு தகவல் தொகுப்பு மையத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் பயனாளிகளின் கணக்குத்தாட்கள் மற்றும் சத்துணவு, அங்கன்வாடிப் பணியாளர்களின் சிறப்பு பொது வருங்கால வைப்பு நிதி கணக்குத்தாட்களை தொகுத்து இணையவழியில் பயனாளிகள் நேரடியாக அணுகும் வகையில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் மேற்கண்ட பணியாளர்கள் தங்களது கணக்குகளை அவ்வப்போது சரிபார்த்துக்கொள்ள முடியும்.

புது Pension Schemeல் Contributory Pension Schemeல் இருக்கிறவர்களுக்கு, அவர்களுடைய தகவல்களை ஏற்கெனவே enter செய்து, அவர்களுக்கு எவ்வளவு balances உள்ளது என்பதையும் அவர்களுடைய situationஐ உடனே அவர்கள் தெரிந்துகொள்ளலாம்.

4. ஆண்டு முழுவதும் ஓய்வூதியர்களுக்கான நேர்காணல்:

ஓய்வூதியர் நேர்காணல் என்பது கருவூல கணக்குத் துறையில் ஓய்வூதியர் உயிர்வாழ்வினை ஒவ்வோர் ஆண்டும் உறுதி செய்யும் அடிப்படை பணியாகும். தற்போது ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் செப்டம்பர் வரை நேர்காணல் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஓய்வூதியதாரர்கள் எளிதில் இச்சேவைகளைப் பெறும் வகையில், ஆண்டு முழுவதும் ஓய்வூதியர் நேர்காணல் மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.

Muster இப்போது ஆண்டுக்கொரு முறை தான் நடக்கிறது. அது July to September. இது எல்லா மாதத்திலேயும் நடத்தி யாருக்கும் அந்த crowding இல்லாதவாறு பார்த்துக்கொள்கிறோம்.

5. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்ட கண்காணிப்புப் பிரிவு:

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் இதர நிருவாக துறைகளுடன் ஒருங்கிணைத்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினை திறம்பட பயன்படுத்துவதை கண்காணிக்க நிதித்துறையில் ஒரு சிறப்புப் பிரிவு அமைக்கப்படும்.

SC, ST sub plan ஏற்கெனவே ஒரு புதுச் சட்டத்தை உருவாக்கி, அதனுடைய செயல்பாட்டை முழுமையாக கண்காணிக்க வேண்டும் என முதலமைச்சர் தெரிவித்தவாறு, அதற்காக ஒரு சிறப்பு பிரிவு நிதித் துறையில் உருவாக்கப்பட்டு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்ட கண்காணிப்பிற்கு ஒரு பிரிவு உருவாக்கப்பட்டு, அந்தச் சட்டத்தோடு compliance check செய்கிறோம்.

6. வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வை குழுவின் பயன்பாட்டிற்கு வழக்கு மேலாண்மை அமைப்பினை செயல்படுத்துதல்:

அதிக அளவில் நிதிச்சுமையை ஏற்படுத்தக்கூடிய வழக்குகளை கையாளும் வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வை குழுக்கும் இதர அலுவலர்களுக்கும் உதவும் விதமாக வழக்குகளைக் கண்டறிந்து அவற்றைத் தொடர்ந்து கண்காணிக்கும் வசதிகளுடன் ‘வழக்கு மேலாண்மை அமைப்பு’ ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

அரசு சுமார் 6 இலட்சம் வழக்குகளில் either plaintiff or defendant இருக்கிறது. இதனால் நமக்கு பல ஆயிரம் கோடி, பல பத்தாயிரம் கோடி பாதிப்பும், பல வகையில் நம்முடைய செயல்பாட்டிற்கு சாத்தியக்கூறுகளுக்கு நீதிமன்றம் இடையூறு செய்வது போல் இருக்கின்ற சூழ்நிலையில் எந்த வழக்கு எங்கு இருக்கிறது, எத்தனை நாளாக இருக்கிறது என்பதைப் பார்க்ககூட நமக்கு ஒரு பெரிய limitation இருக்கிறது. ஏற்கெனவே இந்த பழைய அறிவிப்புகளில் இந்தக் குழுவை உருவாக்கினோம். இந்தக் குழுவினால் பல ஆயிரம் கோடி ரூபாய் ஏற்கெனவே சேமிப்பு கிடைத்திருக்கிறது. இந்தக் குழுவினுடைய செயல்பாட்டை சிறப்பிக்க இந்த IT system.

7. விரிவான தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு:

அனைத்துத் தணிக்கை செயல்பாடுகளையும் சீரிய முறையில் மேலாண்மை செய்யும் நோக்கத்துடன், தொடக்கம் முதல் இறுதி வரை அனைத்து செயல்பாடுகளும் தானியங்கி முறையில் மாற்றியமைக்க, ஒரு விரிவான தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு ஏற்படுத்தப்படும். அனைத்து தணிக்கை நடவடிக்கைகளையும் நிகழ்நேர அடிப்படையில் முழுமையாக கண்காணிக்க இந்த அமைப்பு உதவும்.

Comprehensive Audit Information Management System, accountability தட்டிக் கேட்டு சிறப்பிக்க செய்வதாகும்.

8. பயிற்சி மற்றும் செயல் திறனை மேம்படுத்துதல்:

பொது தணிக்கை தர நிலைகளுக்கு ஏற்ப, ஐந்து தணிக்கை துறைகளின் தணிக்கையாளர்களுக்கு தணிக்கை தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும்.

Training and capacity building எல்லாத் தணிக்கை துறைகளுக்கும் அவர்களுடைய professionalism அவர்களுடைய capacity increase செய்வதாகும்.

9. இணைய பாதுகாப்பு அலகு:

அனைத்து இணைய கட்டமைப்புகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், மென்பொருளை அவ்வப்போது இணைய தணிக்கை மேற்கொள்வதற்காக கருவூலத் துறையில் ‘இணைய பாதுகாப்பு அலகு’ ஒன்று உருவாக்கப்படும். இணைய வழி இடர்பாடுகளை மதிப்பீடு செய்தல், இணைய வழி தாக்குதல்களுக்கு எதிராக தரவு அமைப்புகளை வலுப்படுத்துதல், அமைப்புகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பணியாளர்களுக்கு வழிகாட்டுதல்களை உருவாக்குதல் மற்றும் பல்வேறு தரப்பினரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் இந்த சிறப்பு அலகின் மூலம் மேற்கொள்ளப்படும்.

மாநிலம் முழுவதும் பொதுமக்கள் பயன்படுத்த